# இந்திய துணைத் தூதரகம்
## யாழ்ப்பாணம்

**<u>ஊடக அறிக்கை</u>**

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகமானது தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியாரின் 136வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அரசடி சந்தி நல்லூரில் அமைந்துள்ள மகாகவி பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் சிறப்பு நிகழ்வினை இன்று (11 டிசம்பர் செவ்வாய்க் கிழமை) காலை 9 மணிக்கு ஏற்பாடு செய்திருந்தது.

2. நல்லூர் சிவன் கோவில் பிரதமகுருவும் பேராசிரியருமாகிய பிரம்மஸ்ரீ பத்மநாபசர்மா, நல்லை ஆதீன குருமுதல்வர், அங்கிலிக்கன் திருச்சபையின் ஆயர் வணக்கத்திற்குரிய தியாகராஜா அடிகளார், திரு மறவன்புலவு சச்சிதானந்தம், யாழ் மாநகரசபை முதல்வர் திரு இமானுவேல் ஆர்னோல்ட், வட மகாணசபை அவைத் தலைவர் திரு திரு சீ.வி.கே சிவஞானம், முன்னாள் வடமாகாண எதிர்கட்சி தலைவர் திரு தவராசா, முன்னாள் வடமாகாணசபை மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் திரு சிவாஜிலிங்கம், திரு ஜெயசேகரம், திரு நடராஜா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம், யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு வேதநாயகன், ஆளுனர் செயலாளர் திரு இளங்கோவன், ஆளுனர் உதவி செயலாளர் திரு செல்வநாயகம், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் ந.சண்முகலிங்கன், வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் கிருஷ்ணராஜா, பேராசிரியர் புஷ்பரட்ணம், ஊடகவியலாளர்கள், தூதரக அலுவலர்கள் மற்றும் பல தமிழ் ஆர்வலர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டு பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

3. தூதரக கலாச்சார பிரிவில் இசை பயிலும் மாணவர்கள் பாரதியாரின் பாடல்களை நிகழ்வில் இசைத்தனர்.

***

யாழ்ப்பாணம்
11.டிசம்பர்.2018